00098

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்ப கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2019**
**EPD4531/ ESD2231 –** கற்றல் கற்பித்தல் முன்னோக்கு
இறுதிப்பரீட்சை - மட்டம் 04
02 மணித்தியாலங்கள்

---

காலம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 10.03.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

01. முன்பிள்ளைப்பருவத்தில் சுறுசுறுப்பான கற்றலின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக?

02. முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை என்பவற்றில் பயன்படுத்தக்கூடிய பத்து வித்தியாசமான கற்றல் கற்பித்தல் சாதனங்களை பட்டியலிடுக?

03. இலங்கை ஆரம்பக் கல்வியில் காணப்படும் மூன்று (03) முதன்மை நிலைகளையும் விபரிக்குக?

04. இளம்பிள்ளைகளின் கற்றலில் செல்வாக்கு செலுத்தும் நான்கு காரணிகளை விளக்குக?

05. மகிழ்ச்சிகரமான கற்றலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மூன்றினை(03) விளக்குக?

06. இளம்பிள்ளைப் பருவத்தில் இருந்தே பிள்ளைகளை இனங்கான வேண்டியதன் முக்கியத்தவத்தினை சுருக்கமாக பகுப்பாய்வு செய்க?

07. ‘அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளையும்’ ஆரம்பக் கல்வியில் அதன் முக்கியத்துவத்தினையும் சுருக்கமாக விளக்குக?

08. இரண்டு பிரதான ஒப்படை முறைகளை சுருக்கமாக விளக்குக?

(8x5=40புள்ளிகள்)

## பகுதி II

09. I. ஆரம்பக் கல்வி பற்றிய மகாத்மா காந்தியின் தத்துவப்பார்வையை விளக்குக? (08 புள்ளிகள்)

II. *"முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியருக்கு கல்வித் தத்துவம் பற்றிய முறையான விழிப்புணர்வு அத்தியாவசியமானதாகும்."*

மேலுள்ள கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையினை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக? (12 புள்ளிகள்)

10. I.பிள்ளைகளுக்கு அவர்களுடைய ஆரம்ப வயதுகளில் மகிழ்ச்சிகரமான கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை நான்கு (04) கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக? (08 புள்ளிகள்)

II. "பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் அனுபவங்களை வழங்குவதற்காக உமது கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை எவ்வாறு அமைப்பீர் என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக? (12 புள்ளிகள்)

11. I.கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கில் வினவுதல் நுட்பத்தினைப் பயன்படுத்துகையில் நீங்கள் வினவக்கூடிய நான்கு வித்தியாசமான வகை வினாக்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

II.நீங்கள் வினவுதல் முறையில் கற்பித்தலை மேற்கொள்ளும்போது கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று (03) விடயங்களை விளக்குக?

(06 புள்ளிகள்)

III.கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் கணிப்பீட்டைப் பயன்படுத்துவதானது மதிப்பீட்டைப் பயன்படுத்துவதனைப் பார்க்கிலும் எவ்வாறு அனுகூலமானது என்பதனை நான்கு(04) விடயங்களுடன் விளக்குக? (10 புள்ளிகள்)

12. I.முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பப் பாடசாலை என்பவற்றில் கட்புல கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினைக் (04) குறிப்பிடுக?

(10புள்ளிகள்)

II. கற்பித்தல் சாதனமாக இயற்கைப் பொருட்களையும் தேவையற்ற பொருட்களையும் பயன்படுத்தவதன் அனுகூலங்கள் நான்கினைப் (04) பகுப்பாய்வு செய்க?

(10 புள்ளிகள்)

13. I.வகுப்பறையில் ஆக்கபூர்வமான சுற்றாடலைப் பேணுவதற்கு ஆசிரியர் எடுக்ககூடிய நான்கு செயல்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக? (10 புள்ளிகள்)

II.நீங்கள் குறித்த ஆக்கபூர்வமான பௌதீக சுற்றாடல் உடைய வகுப்பறையைப் பேணும் போது முகங்கொடுக்கக்கூடிய நான்கு சவால்களைக் குறிப்பிட்டு அச்சவால்களுக்கு முகங்கொடுக்ககூடிய வழிமுறைகளைப் பரிந்துரைக்குக?

(10புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது